செ.வெ.எண்:44/2019 நாள்:20.08.2019

**திண்டுக்கல் மாவட்டம்**

**கன்னிவாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் குடிமராமத்து திட்டப்பணிகளை - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி.இ.ஆ.ப அவர்கள் ஆய்வு செய்தார்.**

---

திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடி ஊராட்சி ஒன்றியம், நாயோடை நீர்தேக்கம், ரெட்டியார்சத்திரம் கதிர்நரசிங்கபெருமாள் குளம், சில்வார்பட்டி ஐய்யன்குளம் ஆகிய குளங்களில் நடைபெற்று வரும் குடிமராமத்து திட்டப்பணிகளை இன்று (20.08.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி.இ.ஆ.ப அவர்கள் ஆய்வு செய்து தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டு, அவர்கள் பயன்பெறும் வகையில் அத்திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழகத்தில் நீர் வள ஆதாரங்களை மேம்படுத்திட தமிழகம் முழுவதும் பல்வேறு துரித நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், திண்டுக்கல் மாவட்டத்தில், குடிமராமத்து திட்டத்தில் வரத்து வாய்க்கால் மற்றும் கால்வாய், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகள் ஆகியவற்றை புனரமைத்தல், பலப்படுத்துதல் மற்றும் கலிங்குகள், மதகுகளை மறு கட்டுமானம் செய்தல், நீர் வழிகளில் அடைத்திருக்கும் செடிகளை அகற்றுதல் உள்ளிட்ட சீரமைக்கும் பணிகள் விவசாய சங்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனை தொடர்ந்து இன்றைய தினம், கன்னிவாடி ஊராட்சி ஒன்றியம், நாயோடை நீர்தேக்கம் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டிலும், ரெட்டியார்சத்திரம் கதிர்நரசிங்க பெருமாள்குளம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டிலும், சில்வார்பட்டி ஐய்யன்குளம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் விவசாயிகள் சங்கத்தினர் இணைந்து குளத்தின் கரைகளை பலப்படுத்துதல் மற்றும் வரத்து வாய்க்கால்களை செம்மைப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதியல் உள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கும் குளத்தை சுற்றியுள்ள கிராமங்களில் விவசாயம் செய்வதற்கும், நிலத்தடி நீர் உயர்வதற்கும் இப்பணி அடிப்படையாக அமையும். இப்பணிகளை செம்மையாக செய்வதற்கு, சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளும் தங்களது பங்களிப்பை அளித்து இப்பணிகளை நல்ல முறையில் மேற்கொள்ள உறுதுணையாக இருக்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி.இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம் தெ.புதுப்பட்டியில் நியாய விலைக்கடையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரிசி, பருப்பு, சக்கரை, எண்ணொய் போன்ற பொருட்களின் இருப்பு விபரம், பதிவேடுகள் குறித்தும் மற்றும் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு முறைகள், வருகைபதிவேடு மற்றும் சுகாதார பழக்கங்கள் ஆகியன குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, வட்டாட்சியர் (மேற்கு) திரு.லெட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.விஜய்சந்திரிகா மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**